செ.வெ.எண். 97 நாள்.19.02.2018.

<u>செய்திக்குறிப்பு</u>

திருநெல்வேலி மாவட்ட ஓய்வுற்றோர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் சென்னை ஓய்வூதிய இயக்குநரால் வருகிற 21.03.2018 புதன்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு துறைகளில் (அரசின் நேரடி துறையில் பணிபுரிந்தவர்கள் மட்டும்) பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், தங்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்கள் கிடைக்கப்பெறாமல் நிலுவையாக இருப்பின், தங்களுடைய குறைகளைத் தெரிவித்து முழு முகவரியுடனான விண்ணப்பங்களை **இரட்டைப் பிரதிகளில்** திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு பின்வரும் தகவல்களுடன் 02.03.2018-க்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. இறுதியாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலகம்.
2. கோரிக்கை தற்போது நிலுவையில் உள்ள அலுவலகம்/அலுவலர்.
3. ஓய்வூதிய எண் குறிப்பிட்டுள்ள ஆணை நகல்.

இவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, துறை அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 21.03.2018 அன்று நடைபெறும் ஓய்வுற்றோர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தின் போது சம்பந்தப்பட்ட அலுவலர்களால் மனுதாரருக்கு தெரிவிக்கப்படும்.

எக்காரணம் கொண்டும் 02.03.2018 தேதிக்கு பின் வரப்பெறும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மேலும் **21.03.2018** அன்று நடைபெறும் ஓய்வுற்றோர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திலும் தவறாது கலந்து கொண்டு இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.